# Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **STC 585/2022** | | |
| **PW/DW/CW** | : | **DW1** | | |
| **Name** | : | **ராமராஜ்** | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | **வெள்ளைச்சாமி** | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.02.2026

**முதல் விசாரணை:**

நான் பண்ணைப்பட்டியில் வசித்து வருகிறேன். எனக்கும் புகார்தாரருக்கு 7 வருடங்களாக பழக்கம். நான் புகார்தாரரிடம் டிராக்டர் தொழில் செய்வதற்காக 2 லட்சம் பணம் வாங்கினேன். மேற்படி கடனை 5 சதவீத வட்டிக்கு வாங்கினேன். ஒரு வருடம் மேற்படி வட்டியை கட்டி வந்தேன். அதன்பிறகு எனக்கு வட்டி கட்ட முடியவில்லை. அதனால் புகார்தாரரிடம் பேசி மேற்படி வட்டியை 2 சதவீதமாக குறைக்கும்படி கேட்டேன். அதற்கு புகார்தாரர் 3 சதவீதம் வட்டி தருமாறு சொன்னார். மேலும் என்னிடம் இரண்டு நிரப்பப்படாத கடனுறுதி சீட்டு புகார்தாரர் வாங்கி கொண்டார். பின்னர் 8 மாதம் வட்டி செலுத்தி வந்தேன். பின்னர் புகார்தாரர் என்னிடம் காசோலை கேட்டார். நிரப்பப்படாத என் கையொப்பமிட்ட இந்த வழக்கு காசோலை மற்றும் இன்னொரு காசோலையும் புகார்தாரரிடம் கொடுத்தேன். பின்னர் 6 மாதம் வட்டி கட்டினேன். அதற்கு மேல் கட்ட முடியவில்லை. அசலை கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு புகார்தாரர் சம்மதிக்கவில்லை. பின்னர் நான் கொடுத்த காசோலையை வசூலுக்கு போட்டு எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். நான் வாங்கிய

தொகைக்கு மேலாக வட்டியுடன் சேர்த்து ரூபாய் 5 லட்சத்திற்கு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். புகார்தாரர் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**(புகார்தாரரின் குறுக்கு விசாரணைக்காக வழக்கானது ஒத்தி வைக்கப்படுகிறது)**

S.d. ramaraj
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti